2026 மார்ச் மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 124/2024

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW9 – ரதின்குமார் |
| தகப்பனார் பெயர்: | கருத்தப்பாண்டி |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், போடிநகர் காவல்நிலையம் |
| வயது : | 36 |

04.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது போடிநாயக்கனூர் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.10.2023 ம் தேதி போடிநகர் காவல்நிலையத்தில் Computer பிரிவில் அலுவலலில் இருந்தப்போது போடிநகர் காவல் ஆய்வாளர் குற்ற எண்.493/2023 பிரிவுகள் 294(b), 307 இ.த.ச–ன்படியான வழக்கில் சம்பந்தப்பட்ட சம்பவ இடத்தில் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்த சம்பவத்தை

hp 8 GB Pendrive ஒன்றை என்னிடம் கொடுத்து கணினியில் பதிவேற்றம் செய்ய சொன்னார்.

2. நான் அந்த Pendrive கணினி மூலம் திறந்துப் பார்த்தப்போது, அதில் இரண்டு வீடியோக்கள் பதிவாகியிருந்தன. அதற்கு நான் ஆய்வு செய்து hash value கொடுத்தேன். அதற்கான 65B இந்திய சாட்சிய சட்டத்தின்படி நான் சான்று வழங்கினேன். அது **அ.சா.ஆ.7–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த Pendrive –யை நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. சம்பவ இடத்தில் கண்காணிப்பு கேமராவிலிருந்த பதிவுகளை நான் Disk–ல் பதிவு செய்து, முறையாக காவல்நிலையத்திற்கு கொண்டுவந்தேனா என்றால் ஆய்வாளர் என்னிடம் Pendrive கொடுத்தார். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் கேள்விப்பட்டேன். சம்பவம் இடம் பற்றி எந்த இடத்திலிருந்து கண்காணிப்பு Footage பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற விபரத்தை ஆய்வாளரிடம் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கண்காணிப்பு கேமரா Footage ஆய்வு செய்வதற்கு நான் தனியாக படிப்பு படித்துள்ளேனா என்றால் இல்லை, நான் Computer Course படித்துள்ளேன்.

4. எனக்கு Pendrive பற்றி எனக்கு தெரியாது என்றாலும், காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் Pendrive ஆய்வு செய்வதற்கு அதிகார கடிதம் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, வாய்மொழி உத்தரவு கொடுத்தார்.

**ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.04 19:46:37 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
04.03.2026